# 100 நாள் ஆட்சி - 'ரீல்ஸ்' காட்சிகளும் 'ரியல்' நிலவரமும்!

**ரீல்ஸ் -** பெண்களுக்கு அண்ணனாக, தம்பியாக, மகனாக இருப்பேன் என்று டயலாக் பேசி அதை ரீல்ஸாகப் பரப்பியவர் விஜய்.

**ரியல் - 100 நாள் ஆட்சியில் சூலூரில் 3 வயது பெண் குழந்தை முதல் அந்தியூரில் 85 வயது மூதாட்டி வரை பாலியல் கொடுமைக்கு ஆளான கொடூரம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பெண்களுக்கு பாதுகாப்பில்லாத மாநிலமாகத் தமிழ்நாடு மாறியிருக்கிறது. த.வெ.க.வின் ஸ்ரீவை குண்டம் எம்.எல்.ஏ., இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகி உள்பட பலர் மீதும் த.வெ.க. கட்சியை சார்ந்த பெண்களே பாலியல் புகார்களைத் தெரிவித்தும் இதுவரை சட்டப்படியான எந்த நடவடிக்கையையும் விஜய் எடுக்கவில்லை. மாறாக, புகார் கொடுத்த பெண்மணியை கட்சியை விட்டு நீக்கியிருக்கிறார்.**

**ரீல்ஸ் -** போதையை ஒழிப்பேன் என்று மாரத்தான் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டார் விஜய். கையெழுத்துப் போட்டார். போதை ஒழிப்பு நாள் உறுதி மொழி எடுத்தார். எல்லாவற்றையும் ரீல்ஸ்களாகப் போட்டு விளம்பரம் தேடினார்.

**ரியல் - அவர் போதை ஒழிப்பு உறுதி மொழி எடுத்த அதே நாளிலேயே கோவையில் தனியார் கல்லூரியில் போதைப் புழக்கம் பற்றி புகார் கொடுத்த மாணவர் அமுதனை போதைக் கும்பல் கொடூரமாக கொலை செய்தது. தமிழ்நாடு முழுவதும் போதைப் பொருள் புழக்கமும், அதன் தொடர்பான குற்றங்களும் அதிகரித்துள்ளன.**

**ரீல்ஸ் -** தி.மு.க ஆட்சியில் 10 இலட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கி கஜானாவை காலி செய்துவிட்டதாக, முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மேடையிலேயே பேசினார் விஜய். இதை அவரது கட்சியின் சார்பில் பணம் வாங்கிக் கொண்டு ரீல்ஸ் போடும் ஆட்கள் பரப்பினார்கள்.

**ரியல் - ஆட்சிக்கு வந்த 3 மாதத்திலேயே 20ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கியிருப்பதுடன், த.வெ.க அரசு தாக்கல் செய்த பட்ஜெட் மூலம் ஒரே ஆண்டில் 1 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கும் அரசு என்ற நிலையையும் உருவாக்கியுள்ளது த.வெ.க அரசு.**

**ரீல்ஸ்-** மெட்ரோ இரண்டாம் கட்டத் திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் இரண்டாவது அலகு திட்டம், செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்து ரீல்ஸ் போட்டது விஜய் அரசு.

**ரியல் - ரீல்ஸ்க்காக விஜய் சென்ற இடங்கள் அனைத்தும் தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்டவையாகும். ஊரான் வீட்டு நெய்யில் ஸ்வீட் செய்து கொண்டிருப்பவர் விஜய்தான்.**

**ரீல்ஸ் -** ஆகஸ்ட் 13ஆம் தேதி திடீரென முதலீட்டாளர் மாநாடு நடத்துவதாக அறிவித்து, 1 இலட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்ததாக ரீல்ஸ் போட்டு விளம்பரம் தேடியது விஜய் அரசு. விஜய்யும் இதில் கலந்து கொண்டு போஸ் கொடுத்தார்.



**கோவி.லெனின்**
**தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்**

**ரியல் - முதலீட்டாளர் மாநாட்டிற்கு ஊடகத்தினரை அனுமதிக்கவில்லை. அந்தளவு ரகசியமாக நடந்த மாநாட்டில் போடப்பட்டதாகச் சொல்லப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஒன்று, வெறும் ஒரு இலட்ச ரூபாயில் 4 மாதங்களுக்கு முன் தொடங்கப்பட்ட லைட் ஹவுஸ் க்ரீன் டேட்டா சென்டர் நிறுவனம் 10ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும், இந்த முதலீட்டாளர் மாநாட்டில் பங்கு பெற்ற பெரிய நிறுவனங்களில் 70% அளவுக்கு தி.மு.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்ட நிறுவனங்களாகும். அதை த.வெ.க. கணக்கில் சேர்த்து ரீல்ஸ் ஓட்டியிருக்கிறார்கள்.**

**ரீல்ஸ் -** த.வெ.கவின் தேர்தல் அறிக்கையில் மகளிருக்கு மாதம் 2500 ரூபாய், ஆண்டுக்கு 6 சிலிண்டர், தமிழ்நாடு முழுவதும் மகளிருக்கு இலவச பஸ் பயணம், பட்டதாரி இளைஞர்களுக்கு மாதம் 4000 ரூபாய் என ஏகப்பட்ட வாக்குறுதிகளை அள்ளிவிட்டு, இதையெல்லாம் விஜய் தன் சொந்த பணத்திலேயே கொடுப்பார் என்றும் ரீல்ஸ் போட்டனர்.

**ரியல் - வாக்குறுதியாகத் தந்த அறிவிப்புகள் எதையுமே 100 நாள் ஆட்சியில் நிறைவேற்றவில்லை. தி.மு.க. ஆட்சிக்காலத் திட்டங்களுக்குப் பெயர்களை மாற்றுவதும், 'வெற்றி' என்ற பெயரைச் சேர்க்கும் வெற்றுத் திட்ட அறிவிப்புகளுமே வெளியாகியுள்ளன.**

**ரீல்ஸ் -** விஜய் கர்நாடகாவுக்குப் போகிறார் என்ற செய்தியைக் கேட்டதுமே வருண பகவான் கண் திறந்து மழை பொழிந்ததாகவும், கர்நாடக அரசு அணைகளை திறந்துவிட்டதாகவும் சினிமா துணை நடிகைகளை வைத்து ரீல்ஸ் வெளியிட்டனர்.

**ரியல் - டெல்டா மாவட்டங்களின் குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையைத் திறக்க வேண்டும். 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் குறிப்பிட்ட காலத்தில் திறக்கப்பட்டது. இப்போது ஆகஸ்ட் மாதத்தில் பாதியைக் கடந்த பிறகும், அதாவது 60 நாள் கடந்த பிறகும் மேட்டூர் அணை திறக்கப்படவில்லை. குறுவை நெற்பயிர் என்பது 120 நாட்களில் அறுவடை செய்ய வேண்டியதாகும். அதில் பாதிக் காலம் கடந்துவிட்டது. இனி தண்ணீர் கிடைத்துப் பயிரிட்டாலும் வடகிழக்குப் பருவமழையால் பயிர்கள் மூழ்கும் அபாயம் ஏற்படும்.**

**ரீல்ஸ் -** ஊழலை ஒழித்துவிட்டது த.வெ.க. என்று நம்ப வைப்பதற்கான ரீல்ஸ் போட்டு விளம்பரம் தேடுகிறார்கள்.

**ரியல் - அரசு வழக்கறிஞர் பதவிக்கு 20 இலட்ச ரூபாய் வரை பணம் வாங்கிக் கொண்டு பதவி தருவதாக த.வெ.க.வைச் சேர்ந்த பெண் வழக்கறிஞரே அமைச்சர் மீது புகார் தெரிவித்தார். அந்தப் பெண் வழக்கறிஞரை கட்சியை விட்டு நீக்கி விட்டார்கள். பதவிக்குப் பணம் என்பது தொடர்கிறது.**

**ரீல்ஸ் -** விஜய்யை ஹீரோவாக சித்தரிக்கிறார்கள்

**ரியல் - மக்களுக்கு வில்லனாகவும் நிர்வாகத்தில் காமெடியனாகவும் இருக்கிறார்.**

### நம்பியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி

## புதிய வெள்ள நீர் கால்வாய் அமைக்க வேண்டும்!

### ஒன்றிய அமைச்சருக்கு – அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. கோரிக்கை!

*தூத்துக்குடி, ஆக. 19 -*

*தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வட்டத்தில் உள்ள குட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு நீர்வளத்தை பெருக்குவதற்காக, நம்பியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி புதிய வெள்ளநீர்க் கால்வாய் அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்த நிலையில் இதற்காக விரிவான திட்ட அறிக்கை (DPR) மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள அறிவிப்பு கடந்த தி.மு.க. ஆட்சியில் வெளியிடப்பட்டது. மேலும், நீர்வளத் துறையின் அரசாணை நிலை எண் 4321.06.2022 அன்று அரசு நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டது.*



*இந்த அறிவிப்பின் அடிப்படையில், "வாப்கோஸ்" (WAPCOS) நிறுவனம் மற்றும்; நீர்வளத் துறை, மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் ஆகியோரால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதனைத் தொடா;ந்து, நீர்வளத் துறையின் முதன்மைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ஆகியோர், இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசிடமிருந்து நிதி உதவி கோரி அரசுக்கு ஒரு முன்மொழிவை (கடித எண் S7(2)/50424/OT4/2006, நாள்: 11.07.2025) சமர்ப்பித்தனர்.*

*இத்திட்டத்தின் கீழ், நம்பியாற்றில் ஏற்கனவே உள்ள புலிமான்குளம் அணைக்கட்டிலிருந்து 1.5 கி.மீ. தொலைவில் கீழ் நோக்கி அமைந்துள்ள ரம்மதபுரத்தில் ஒரு புதிய தடுப்பணை கட்ட வேண்டும். அத்துடன் 22 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய கால்வாய் ஒன்றும் வெட்டப்பட்டு இக்கால்வாய் வழியாகச் செல்லும் நீரானது உவரி மற்றும் குட்டம் வழியாகச் சென்று தூ த்துக்குடி மாவட்டத்தில் உள்ள புத்தன்தருவை குளத்திற்கு வந்தடையும்.*

*இந்த முயற்சியானது தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டத்தில் உள்ள கடகுளம், இலக்குளம், தச்சன்விளை, புத்தன்தருவை, நடுவக்குறிச்சி, தட்டார்மடம் மற்றும் கொம்மடிக்கோட்டை போன்ற பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதுடன், நிலத்தடி நீர் உவர்ப்புத் தன்மையடைவது தடுக்கப்படும்.*

*ஆகவே, விவசாயிகளின் நலன் மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டத்தின் கிராமப்புற வளர்ச்சியைக் கருதி இத்திட்டத்திற்கான நிதியை ஒதுக்குவதையும், தடுப்பணை கட்டி வெள்ளநீர் கால்வாய் அமைப்பதையும்; விரைவு படுத்துமாறு ஒன்றிய ஜல்சக்தித் துறை அமைச்சரை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தாயார்

## திருமதி தேன்மொழி ஜெயக்குமார் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 19 -

ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகத்தின் தாயார் திருமதி. தேன்மொழி ஜெயக்குமார் அவர்கள் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் லட்சுமி கார்டன் இல்லம் - திண்டலில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

### தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## முரசொலி மாறன் 93 வது பிறந்தநாள் விழா!

### மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் மாலை அணிவித்து மரியாதை!

தென்காசி, ஆக.19 –

தென்காசியில் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் அவங 93 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட் டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி மாறன் அவர்களின் திரு உருவப்படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழுஞ்சலி செலுத்தப்பட்டது.

கலைஞரின் மனசாட்சியாக விளங்கியவரும், தி.மு.க.வின் மூளையாக செயல்பட்டவரும், ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல் களையும் பெற்று மிகச் சிறப்பாக பணியாற்றியவருமாகிய முரசொலி மாறனின் அவர்களின் 93 வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (17 ம்தேதி )தென்காசி மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி மாறன் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஆதி தமிழர் கட்சி பொதிகை ஆதவன்,தென் தமிழரசு, திராவிடர் தமிழர் கட்சி மாநில பொறுப்பாளர் கரு.வீரபாண்டியன், மாவட்ட செயலாளர் பண்பொழி சேகர், தென்காசி கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம்,மேலகரம் பேரூர் துணை செயலாளர் ஜீவானந்தம், கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மஹ்முதா சையத், துணை அமைப்பாளர் கதிர், ஒன்றிய துணை செயலாளர் ஐ.டி.ஐ. ஆனந்தன், செங் கோட்டை ஒன்றிய துணை செயலாளர் வாசுதேவன், மாவட்ட ஐடி விங் அமைப்பாளர் அழகுதமிழ் சங்கர், மாவட்ட சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர்கள் சூர்யா மணி என்ற ஈஸ்வரன்,ஊர்மேலழகியான் சுப்பிரமணியன், மாவட்ட கலை இலக்கிய அணி கருப்பண்ணன், மாவட்டச் நெசவாளர் அணி இலஞ்சி சண்முகநாதன், கஜேந்திரன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்கள் ராமராஜ்,சபீக் அலி,முத்து சுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதி வல்லம் செல்வம், உட்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

### பூர்வீக வீட்டிற்கு மின் இணைப்பு வழங்காததால்

## நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெண் தீக்குளிக்க முயற்சி!

நெல்லை, ஆக.19 –

நெல்லை மாவட்டம் களக்காடு அருகே தாங்கள் வசித்து வரும் பூர்வீக வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க மறுப்பதாக கூறி நேற்று முன்தினம் (17 ம்தேதி) நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போர்ட்டி கோவில் நின்று கொண்டிருந்த பெண் தீக்குளிக்க முயன்றார்.

நெல்லை மாவட்டம் களக்காடு டோனாவூர் அருகே செட்டிமேடு பகுதியைச் சேர்ந்தவர் ஐகோர்ட் மகாராஜா (43), பெயின்டர். இவரது மனைவி நாகமாரி (40). நாகமாரியின் தந்தைக்கு சொந்தமான பூர்வீக விடு அப்பகுதியில் உள்ளது.

தந்தை இறந்து விட்ட நிலையில், அந்த வீடு, சில ஆண்டுகளாக பராமரிப்பற்று கிடந்தது.

மீண்டும் அவ்வீட்டில் குடியேறிய நாகமாரி, தாங்கள் வசிக்க மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

ஆனால் அந்தவீடு புறம்போக்கு நிலத்தில் இருப்பதாக கூறி மின் இணைப்பு வழங்கப்பட வில்லை. இதைத் தொடர்ந்து கணவன், மனைவி இருவரும் நேற்று முன்தினம் நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மனு அளிக்க வந்தனர்.

கணவர் ஐகோர்ட் மகாராஜா மனு அளிக்க அலுவலக அரங்கிற்கு சென்ற நிலையில், ஆட்சியர் அலுவலக போர்டிகோவில் நின்று கொண்டிருந்த அவரது மனைவி நாகமாரி, திடீரென மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்றார்.

அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவரை தடுத்து நிறுத்தி மீட்டனர்.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

தங்களது பூர்வீக வீட்டில் வசிக்க வழிவகை செய்ய வேண்டும் என அவர் கண்ணீர் மல்க கேட்டுக் கொண்டார்.



கழக முன்னாள் அமைப்பு செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விருத்தாசலம் எம்.எஸ். (என்கின்ற)எம். செல்வராசு அவர்களின் 30 ஆம் ஆண்டு நினைவு தினம் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் தலைமையில் அனுசரிக்கப்பட்டது. இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் தி. வேல்முருகன் கனக. கோவிந்தசாமி கோட்டேரி பழனி சுரேஷ் ஆசைத்தம்பி செல்வம் இளைஞர்அணி மற்றும் கழக சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட மாவட்டக் கழக, நகரக் கழக ஒன்றிய கழக பேரூர் கழக கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.

### எம்,எஸ்,கணேஷ்குமார் தலைமையில்! முன்னாள் கழக அமைப்பு செயலாளர்

## விருத்தாசலம் எம்.எஸ்.(எ) எம்.செல்வராசு நினைவுநாள் நிகழ்ச்சி!

### கழகத்தினர் மலரஞ்சலி!

*கடலூர் ஆக.19.*

*முன்னாள் கழக அமைப்பு செயலாளர், விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஒருங்கிணைந்த தென்னார்காடு முன்னாள் மாவட்டக் கழக செயலாளர் எம்.எஸ் (எ) எம்.செல்வராஜ் அவர்களின் 30 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் தலைமையில்,*

*விருத்தாசலம் பாலக்கரையில் உள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து கழகத்தினர் புகழ் அஞ்சலி செலுத்தினர்.*

*பிறகு பாலக்கரையில் இருந்து மௌன ஊர்வலமாக சென்று அவரது வீட்டில் உள்ள திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தினர்.*

*நிகழ்ச்சியில் விருத்தாசலம் நகர கழக செயலாளர் க.தண்டபாணி, ஒன்றிய செயலாளர்கள் தி. வேல் முருகன், கனக கோவிந்தசாமி, கோட்டேரி. சுரேஷ், ஆசைத் தம்பி, பாத்திரக்கடை செல்வம், மாவட்ட ஆதி திராவிட நலக்குழு அமைப்பாளர் எஸ்.ராமு, பொதுக்குழு உறுப்பினர்கள் அரங்க. பாலகிருஷ்ணன், குரு சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*சுந்தரமூர்த்தி, மாவட்டப் பிரதிநிதி ஆட்டோ பாண்டியன், அவைத் தலைவர் செங்குட்டுவன், நகர இளைஞரணி அமைப்பாளர்கள் பொன். கணேஷ், வெங்கடேசன், அருண்பிரபாகர், அப்துல் அஜித், நகர நிர்வாகி விருத்தாசலம் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் தர்ம. மணிவேல், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் அறிவுடைநம்பி, முகமது பாசில், வழக்கறிஞர்கள் இளங்கோ, எம்.கே. அருள்குமார், கே. ரவிச்சந்திரன் முத்து, விருத்தாசலம் நகர மன்ற உறுப்பினர்கள் அன்பழகன், தளபதி, அறிவழகி முருகன், வசந்தி புருஷோத்தமன், தீபா மாரிமுத்து, ராசாத்தி சரவணன், நல்லூர் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் பூலாம்பாடி டி. அண்ணாதுரை வயலூர் கு. பழனிசாமி நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நிஷாந்த், இளையராஜா, பெரியநெசலூர் ஓ.குமார் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர்,கிளை கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.*